

அமரர்

# வல்லிபுரம் முருகுப்பிள்ளை

03.10.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# வல்லிபுரம் முருகுப்பிள்ளை

(உடுத்துறை வடக்கு, தாளையடி.)

*அவர்களின்*
*சிவபதப்பேறு குறித்த*

**31ம் நாள் நினைவு மலர்**

**03.10.2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

"எம்மையெல்லாம் வையத்துள் வாழ்வாங்கு
வாழவைக்க அல்லும் பகலும் அயராது
பாடுபட்டு இரவைப்பகலாக்கி, இரத்தத்தை
வியர்வையாக்கி, எமை ஆராட்டிச்சீராட்டி
அன்போடு ஒழுக்கத்தையும் நல்ல
கல்வியையும் கற்க வழி காட்டி
எமையெல்லாம் மீளாத்துயரில்
ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்து விட்ட
தந்தையை எமது "இதயக்கமலத்தில்"
இருத்தி நெஞ்சுருகக் கண்ணீர் சிந்தி
நெய்விளக்கேற்றிடும் இவ்வேளையில்
அவரது பிரிவு குறித்து வெளியிடப்படும்
இந்நினைவு மலரை அவரது பாதார
விந்தங்களில் வைத்து சமர்ப்பணம்
செய்கின்றோம்.

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



மண்ணில்
02
07
1914

விண்ணில்
03
09
2018

# அமரர்
# வல்லிபுரம் முருகுப்பிள்ளை

## அவர்களின் திதி வெண்பா

"ஆண்டு விளம்பி வருட ஆவணித் திங்கள் தனில்
ஆன தேய்பிறை அட்டமித் திதியதனில்
ஆண்டதுவோ நூற்றி நான்கு வருடமது வாழ்ந்து
ஆண்டவன் அழயினிலே சேர்ந்த நாள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்





## தேவாரம்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாயென் நெஞ்சந்துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கி
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோகியசுந்தரனே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன்சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமை மண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுது[illegible].

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து


வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறையரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# வல்லிபுரம் முருகுப்பிள்ளை
அவர்களின்
# வாழ்க்கை வரலாறு



இலங்கைத் திருநாட்டின் யாழ்ப்பாணம் எனும் கலாசார பூமியில் வடமுனையின் தென்கிழக்கே கடலன்னை தாலாட்ட வனப்பு மிக்க வயல் வெளிகளையும் கொண்டமைந்து பறவைகளின் சுவர்க்க பூமியாகவும் மணல் மண் வளம் நிறைந்த பகுதியாகவும், வரலாற்றில் எமது பூர்வீகக் குடிகளான நாகர்கள் வாழ்ந்ததுமான வடமராட்சி கிழக்கில் தனித்துவமிக்க சான்றோர் தவழ்ந்த உடுத்துறை மண்ணிலே சீரோடும் சிறப்போடும் புகழோடும் வாழ்ந்து வந்த வல்லிபுரம் வள்ளிப்பிள்ளை (மீனாட்சிப்பிள்ளை) இணையர்க்கு அவர் தம் இனிமையான இல்லற வாழ்வில் உத்தம புத்திரனாக ஊர் மெய்ச்சும் பெரியோனாக 1914ம் ஆண்டு 07ம் மாதம் 2ம் திகதி அவதரித்தார். தவமிருந்து தாம் பெற்ற பிள்ளைக்கு முருகுப்பிள்ளை எனும் நாமமிட்டு உவகை கொண்டனர்.

முருகுப்பிள்ளை நாமத்தோடு கல்வியிலும் இதர துறைகளிலும் வளர்ச்சியடைந்த இவர் கடற்றொழிலிலும் வேளாண்மையிலும் சிறப்பான தேர்ச்சி பெற்று மிடுக்கான நடையோடும் பெற்றோர்க்கு ஏற்ற பிள்ளையாக வளர்ந்து வந்தார்.

இளமைப்பருவம் எய்ததும் உடுத்துறை SKV என அழைக்கப்படும் கதிரித்தம்பி சம்மாட்டியாரின் மூத்த மகளான இலட்சுமிப்பிள்ளையை தனக்கேற்ற துணையாக மங்கல நாண் பூட்டி மணமுடித்தார். இல்லறவாழ்வு இனிமையளித்து மாமனாரின் தொழிலையும் சிறப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாக ஆற்றி வந்தார். கடலோடு தவழ்ந்து வயல் மடி மீது உறங்கி ஓயாமல் உழைத்தார். இல்லற வாழ்வு இலட்சுமிப்பிள்ளை எனும் அன்பான பண்பான மனையோடு தொடர்ந்த போதிலும் உற்ற கணவனாக வாழ்ந்த போதும் பிள்ளைச் செல்வமின்றி புழுவாகத் துடித்தனர். மழலை மொழியின்றி தாம் வாழ்ந்த மனை எல்லாம் இருள் சூழ்ந்த காட்சி கண்டு அவர்கள் இதயம் நொறுங்கின. வேண்டாத தெய்வமில்லை ஏறாத கோயிலில்லை. இருவர் செய்த அறப்பயன் தவத்தால் தம் சந்ததி தழைக்கவென இறைவனின் கிருபையால் ஏக புத்திரனை பெற்று மகிழ்ந்தனர். குடும்பத்தின் குலவிளக்காய் வம்சத்தின் விருட்சமான தம் மகவுக்கு இராசேந்திரம் எனும் நாமமிட்டு அன்புருக வாழ்ந்தனர்.

கணவனும் மனைவியும் கனிவோடு தம் மகனை கண்ணுக்குள் வைத்து காத்து வளர்த்தனர். மகனும் படிப்பிலும் சிறப்படைந்து அரச ஊழியனாய் பெற்றோர்க்கு பெருமை சேர்த்தான். ஆனாலும் நாட்டில் ஏற்பட்ட யுத்த வன்முறையால் தாம் தவமிருந்து பெற்ற பிள்ளைக்கு இடர் வரலாம் என அஞ்சி தம் பிள்ளை தம்மோடு இருந்தால் போதுமென மகனிடம் மன்றாட்டமாக அழுது கேட்ட போது பெற்றவரின் தவிப்பைக் கண்டே மகனும் உத்தியோகம் துறந்து ஊர் திரும்பினார். வணிகத்திலே மகனை சிறப்படைய வைத்தனர்.

நாட்கள் அசைந்தன. தம் பிள்ளைக்கு உற்ற துணையை எதிர்பார்த்து காத்த வேளை அயல் கிராமமான வத்திராயன் தெற்கிலே வசித்து வந்த சுப்பிரமணியம் வள்ளியம்மை இணையரின் மகளான யோகலட்சுமியை தம்பிள்ளைக்கு மணமுடித்து கொடுத்தனர். மருமகளும் தன் பங்கை சிறப்புடனே ஆற்றினார். கணவரின் பெற்றோரையும் தன் பெற்றவராக எண்ணி கனிவு கொண்டு பராமரித்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பிள்ளையை மட்டுமே கொடுத்த இறைவன் இரண்டாவது பிள்ளையின் வடிவமாக தமது மருமகளைக் கண்டு பேருவகை கொண்டனர். தம் மகனின் இனிதான இல்லறத்தின் பயனாக முறையே பிறேமானந்தன், பிறேமலதா, பிறேம்குமார், விஜிதகுமார், அருள்தாஸ் என்னும் பேரப்பிள்ளைகளைக் கண்டு கனிவோடு காத்தார். பேரப்பிள்ளைகளின் மழலை மொழிகளின் இன்பத்தில் இருவரும் திளைத்தனர். பிள்ளைகளை கொஞ்சிக்குலாவி தமது முதுமையையும் மறந்து சந்தோசத்தை மட்டுமே அனுபவித்து வந்தனர். பேரப்பிள்ளைகளும் கல்வியிலும் ஏனைய துறைகளிலும் சிகரம் தொட்டனர். தனது பிள்ளையோடும், மருமகளோடும், பேரப்பிள்ளைகளோடும் கூடிக்குலாவி இன்பமாக வாழ்ந்து வந்த அன்னாரின் வாழ்வில் பேரிடியாக வீழ்ந்தது ஓர் செய்தி. அவர் செவிகள் அதனைக் கேட்க மறுத்தன, கண்கள் குருடானது. தனக்கு ஏற்ற துணையாக தாயாக இருந்து தன்னைத் தாங்கி வாழ்வின் சுக துக்கங்களில் இணைந்து மகனையும் மருமகளையும் பேரப் பிள்ளைகளையும் கனிவோடு காத்து வந்த முருகுப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை பூவோடும் பொட்டோடும் இவ் உலகை விட்டு கணவன் கதறியழ விண்ணுலகம் 25.01.2007 சென்றார்.

தன்னவள் போனதும் மனைவியின் பிரிவைத் தாங்காது அமரர் முருகுப்பிள்ளை வாட்டத்தோடு வாழத் தொடங்கினார். ஆனாலும் சிறிது காலத்தின் பின் மகன், மருமகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் ஆகியோரின் வற்றாத பாச மழையில் நனைந்து மீள் எழுந்து நிமிர்வோடு வாழ்ந்து வந்தார்.

காலச்சக்கரம் மெல்ல மெல்ல சுழன்று போனது. தமிழர் தாயகமெங்கும் யுத்த மேகங்கள் சூழ்ந்த வேளை உடுத்துறையை விட்டு வந்தாரை வாழ வைக்கும் வன்னி மண்ணில் இரு தடவைகள் இடம் பெயர்ந்து போரின் வடுக்களை சுமந்து வாழ்ந்த போதும் மிடுக்கான நடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பான குணத்தை முதுமையிலும் வெளிக்காட்டி நின்றார். மீளவும் சொந்த மண்ணில் முதுமையை மறந்து இன்பத்தோடு வாழ்ந்தார்.

பேரப்பிள்ளைகளான பிறேம், விஜி, அருள் ஆகியோர் புலம்பெயர்ந்து வசித்த போதும் அவர்கள் தமது அப்பப்பா மீது உயிரையே வைத்தனர். இவ்வாறு செல்வச் செழிப்போடு **104** ஆண்டுகள் இப்புவியில் வாழ்ந்து பிறப்பின் மகத்துவத்தை அர்த்தத்தை தாம் செய்த பிறவிப் பயனின் நன்மையை அனுபவித்து நூற்றாண்டு கடந்த சாதனையோடும் செல்வச் செழிப்போடு வாழ்ந்து வருகையில் காலனின் பார்வையில் யாரும் தப்பி விட முடியாது. இறப்பும் பிறப்பும் மனித வாழ்வின் அத்தியாயங்களே. மனிதன் ஏற்றே ஆக வேண்டும். கால நியதியின்படி முதுமை அவரை கொஞ்சம் கொஞ்சமாக வாட்டத்தொடங்கியது. இவ்வுலகில் சீரோடும் சிறப்போடும் பாசத்தோடும் வாழ்ந்து பலரின் வாழ்விற்கு ஏணியேற்றி உறவுகளை உயர்த்தி அனைவரையும் காத்து வந்த அந்த ஜீவன் பிரிவதற்கான நேரம் நெருங்கி வந்தது. இடர் பட்ட போதேல்லாம் தன்னைத் தாங்கி மகளாக தாயாக இருந்து தன்னைக் காத்து வந்த தனது மருமகள் யோகலட்சுமி பார்த்திருக்க இவ்வுலகில் பிறவிப்பயனை அனுபவித்து **03.09.2018** மு.ப **11.15** மணிக்கு அமரர் வல்லிபுரம் முருகுப்பிள்ளை இறைவனடி சேர்ந்தார்.

**உண்மையாக, நாணயமாக, நடப்பவனுக்கு மக்கள் மனதில் ஓர் சிறந்த இடம் உண்டு**

**பெரியார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகனின் தவிப்பு

விழி நீர் வழிய
விழி மூடா நினைவுகளுடன்
வருந்தி வடிக்கிறேன் அப்பா
நான் செய்யும் செயலனைத்தும்
பெருமை கொள்வாய்
உன் நம்பிக்கையாய்
எனை வளர்த்தாய்
தனியனாய் நான் பிறந்த போதும்
வினையேதும் வராமல்
கண்காத்த தந்தையே
நூறாண்டுகள் தாண்டி நீங்கள்
உயிரோடு வாழ்ந்து எமை உயரம் தொட
வைத்தவரே
ஆண்டுகள் ஆனாலும்
ஆறாது உங்கள் நினைவு

**சுவாமி விவேகானந்தரின் சிந்தனையிலிருந்து....**

உங்கள் உடம்புக்கு மரணம் உண்டு
ஆனால் உங்களுக்கு ஒரு போதும் மரணமில்லை.

எப்போதும் அச்சத்திலிருப்பதை விட ஆபத்தை ஒரு முறை சந்திப்பதே மேல்.

மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே ஏன் வேறுபாடு இருக்க வேண்டும்? இறைவன் தான் படைத்தார் என்பது போன்ற கருத்துக்கள் எல்லாம் குழந்தைகளுக்குத்தான் தகுதியானவை.

உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகளின் துயரம்

நேசமும் புன்னகை முகத்துடனும்
எத்துன்பத்திலும் இன்பமாய் எமைக்காத்த
சொந்தமே
எப்போதும் உங்கள்
பிள்ளை போல
பாசமாய் எனைப் பார்ப்பீர்கள்

உங்கள் அன்பு கண்டு
மருமகள் நான்
மாட்சிமை பெற்றுவிட்டேன்
தம் இறுதிக்கணத்திலும்
என் அருகில் உம் ஆத்மா
நன்றியோடு போனதை
எண்ணிக் கலங்குகிறேன்
மறு பிறப்பென்று
மீண்டும் உங்கள்
மருமகளாய் பிறந்துவிட
தவம் பல செய்திடுவேன்
கண்களில் நீரிவழிய
உங்கள் அன்பு மருமகள்

## சிறப்புப் பெயர்கள்

| | | |
|---|---|---|
| நள்ளிரவுச் சூரியன் நாடு | - | நோர்வே |
| சூரியன் உதிக்கும் நாடு | - | ஜப்பான் |
| நைல் நதியின் கொடை | - | எகிப்து |
| உலகத்தின் தடுக்கப்பட்ட இடம் | - | திபெத் |
| ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் | - | சுவிற்சலாந்து |
| ஐரோப்பாவின் நோயாளி | - | துருக்கி |
| புனித நாடு | - | பாலஸ்தீனம் |
| தங்கப்போர்வை நாடு | - | அவுஸ்ரேலியா |
| அழியா நகரம் | - | ரோமாபுரி |
| உலகின் கூரை | - | பமீர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் துயரம்

கண்ணீர் வடித்து
எம் சோகத்தை
ஆற்றிக் கொள்ள முடியவில்லை
உயிரைப் பிரிந்த எங்கள் அப்பப்பா
எம் சோகத்தை எப்படி அறிவார்

இன்று எமை
தொற்றிக் கொண்ட
சோகத்தை எங்கு தொலைப்பது
காற்று கூட நிரப்ப முடியாத
வெற்றிடமானது நீங்கள்
வாழ்ந்த ஊரும்
எங்கள் உறைவிடமும்
மானுட சந்தையில்
விலை மதிக்க முடியாத
உயிரை வாங்கிப்போன
எமனை ஒன்று கேட்கிறேன்

ஒட்டுமொத்தமாய்
எம் ஊரின்
மூத்த அடையாளமாய்
இருந்த எம் அப்பப்பாவின்
உயிரைப் பறித்து விட்டாய்
இப்புவி உள்ளவரை
மாறாது உங்கள் நினைவு

**ஒரு முறை வந்தால் கனவு**
**இரு முறை வந்தால் ஆசை**
**பல முறை வந்தால் இலட்சியம்**

**அப்துல்கலாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூட்டப்பிள்ளைகள் தவிப்பு

கூவி அழைக்கிறோம்
உம் பதிலைக் காணலயே
வார்த்தைக்கு வார்த்தை
உங்கள் நாவில்
எங்கள் பெயர்கள்
இன்று அதைக் காணாமல்
ஏங்கித் தவிக்கிறோம்
எம் விழிகள் உமைத்
தேடுகிறது ஓடோடி
வந்து எம் ஏக்கம் தீருமய்யா
பூட்டப்பிள்ளைகள் நாம்
காத்து நிற்கிறோம்.

## நல்லவை சில

சந்திப்புக்கள் தற்செயலானவை
பிரிவுகள் தவிர்க்க முடியாதவை

நம்பிக்கை இல்லாத வாழ்க்கை வேர் அற்ற
மரம்போல் ஆகும்.

அபிப்பிராயம் கொடுப்பதை விட
அபிப்பிராயம் கேட்பது மேல்.

செல்வமும் புகழும் கடல் நீரைப் போன்றது
அதைக் குடிக்கக் குடிக்க தாகம் அதிகமாகும்.
பணிவு இல்லையேல் மனித குலம் இருக்க முடியாது

உண்டு நீ நீதிபதியாய் இரு உண்மையில் நீ
மகிழ்ச்சியாய் இருப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# கௌரிகாப்பு



**விநாயகர் துதி**

*முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு*
*என்னின் றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்*
*சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்*
*எக்குற்றமும் வாராமற்கா.*

வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினை யாவும் பனி போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகிடாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அன்று நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்து விடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்து விடு வையகத்தில் வாழ விடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பை புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கும் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்மைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்துவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ் சுடரே காளியுனைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலுள் ளோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

*திருச்சிற்றம்பலம்*

**"தொடக்கம் ஒன்று இருந்துவிட்டால்**
**முடிவும் ஒன்று இருப்பதுண்டு"**
***இடைவழியில் முடிந்து விட்டால் மிகுதி வழி***
***என்னவாகும்?***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்த சஷ்டி கவசம்

### காப்பு
### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள்
கந்த சஷ்டி கவசந் தனை.



### குறள் வெண்பா

**அமரரிடர் தீர அமரம் புரிந்த**
**குமரனடி நெஞ்சே குறி நூல்**

### நிலைமாண்டிய ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயுதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு டிலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெறறென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈர்ராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல் பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர் ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டிகுடிகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீலா லீலா லீலாவிநோத னென்
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
என்றலை வைத்துன் இணையடிகாக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர் வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரெண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பனைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்துணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்கா

எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடியட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியம்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் ளென்பும்
நாகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தாளெனைக் கண்டாறகலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கண்டுடனாங்கம் கதறிடக் கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணல்ஏரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டு அதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
எறிய விஷயங்கள் எளிதுடனிறங்க
ஒளிப்பும சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பும் பித்தம்

சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்க உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாக
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவயொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணிகா சலனே சங்கரன் புதலவா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரர் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் குடியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்

வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக்கொண்டு
ஓதியே செவித்து உகந்துநீ றணிண
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் தருளுவரை
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நாவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டடாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாயக் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் – சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத்தேழிவர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும் சின்னக்
குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் றரசே
மயில்நடமிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவ ஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்

முற்றிற்று
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதியாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே!
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்!

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேவன் சிவலோகன் தில்லைச்சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார் யாம் ஆரேலோர் எம்பாவாய்.!

முத்தன்ன வெண் நகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியர் பாடாரோ நஞ்சிவனை!
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ!
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ!
எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்!
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேதவிழுப்புமுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

மாலறியா நான்முகனும் காணாமலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிநீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக்கோதாட்டும்
சீலரும் பாடிச் சிவனே சிவனேயென்
ஓல மிடினும் உணராய் உணராய் காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்!

மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றதும் நானாமே
போன திசைபகராய் இன்னமும் புலர்ந்தின்றோ!
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய் திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தம்கோனைப் பாடலோர் எம்பாவாய்.!

அன்னே யிவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ் சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றேவாய் திறப்பாய்
தென்னா என்னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னானை என்னரையன் இன்னமுதென்றெல்லோமுஞ்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னுந்துயிலுதியோ!
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.!

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
எழில் இயம்ப இயம்பும் வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய் திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடேலோர் எம்பாவாய்.!

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்பழம்பொருளே
பின்னைப்புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார்தாள்பணிவோம் ஆங்கவர்க்கேபாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசேதொழும் பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே உமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோர் எம்பாவாய்.!

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந்துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து கிடைத்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல் போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்!
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்

ஆர்த்த பிறவித்துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்பாவார் கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல் மேல் வண்டார்ப்பப்
பூத்திகமும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனை நீராடேலோர் எம்பாவாய்!

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப்பைம் போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலர்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போற்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்குப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.!

காதார் குழையாடாப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளாமாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத்தார் பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள் விண்யோரைத்தான்பணியாள்
பேரரையாற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும்வித்தகர்தாள்
வாருருவம் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம் புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்.!

முன்னைக்கடலை சுருக்கியெழுந்துடையான்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பின் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவன் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னைப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

செங்கணவன் பால் திசைமுகன்பால் தேவர்கள் பால்
எங்கும் இலாதோர் இன்பம் நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்தம்மைக்கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கன் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்.

அண்ணாமலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார் கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப்பிறங் கொளிசேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந்தாடேலோர் எம்பாவாய்!

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்குஅப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோர் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுந் காணற்க
இங்கிப் பரிசேயெமக் கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறெமக்கேலோர் எம்பாவாய்

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாந் செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்குத் தோற்றாம் பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாதபுண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன் மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவுகள்

## மனித உடல் பற்றிய தகவல்கள்

• மருத்துவத்தின் தந்தை

**கிப்போ கிரட்டிஸ்**

• மனித உடலின் சாதாரண வெப்பநிலை

**98.4°F, 36.8°C**

• வெப்பநிலையை அளவிடும் சர்வதேச அலகு

**கெல்வின்**

• சராசரி நாடித்துடிப்பு நிமிடத்திற்கு

**72 தடவைகள்**

• மிகப் பெரிய சுரப்பி

**ஈரல்**

• மிகப் பெரிய அங்கம்

**தோல்**

• மிகப் பெரிய உறுப்பு

**கல்லீரல்**

• மிகப் பெரிய எலும்பு

**தொடை எலும்பு**

• மிகவும் வன்மையான பகுதி

**பல் மிளிரி**

• மிகவும் மென்மையான பகுதி

**மூளை**

• குருதியின் வகைகள்

**A,B,AB,O**

• மொத்த எலும்புகள்

**206**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முதலில் இறங்கும் பகுதி

  **மூளையின் கலங்கள்**
- உயிர் உள்ள திரவம்

  **இரத்தம்**
- சுத்தமான இரத்தத்தை கொண்டு செல்லும் குழாய்கள்

  **நாடிகள்**
- அசுத்த நீரைப் பருகுவதால் ஏற்படும் நோய்

  **வாந்திபேதி**
- HIV வைரஸ் தொற்றினால் ஏற்படும் நோய்

  **அயடீன்**
- புரதம் மிக்க உணவு

  **பருப்பு**
- மனித நாக்கு மூலம் உணரக் கூடிய சுவைகள்

  **இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, கசப்பு,உறைப்பு**
- எலியினால் பரப்பப்படும் நோய்

  **பிளேக் நோய்**
- விற்றமின் அதிகம் இருக்கும் உணவு

  **தக்காளி**
- வியர்க்காத பகுதி

  **நாக்கு**
- இரத்தம் பாயாத பகுதி

  **கண்ணின் கருவிழி**

## சர்வதேச குறியீடுகள்

- வெண்புறா -அமைதி, சமாதானம்
- ஒலிவ் மரத்தின் இலை -சமாதானம்
- மஞ்சள் கொடி -தொற்றுநோய்
- கறுப்புக் கொடி -எதிர்ப்பு, சோகம்,மரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| • அரைக்கம்பத்தில் கொடி | -இரங்கல் |
| • சிவப்புக் கொடி | -உலகத் தொழிலாளர் அமைப்பு |
| • சிவப்புச் சக்கரம் | -வளர்ச்சி |
| • சிவப்பு முக்கோணம் | -குடும்பக் கட்டுப்பாடு |
| • சிவப்பு விளக்கு | -மருத்துவமனை,ஆபத்து நிறுத்து |
| • செஞ்சிலுவை | -மருத்துவ உதவி |
| • கண்கள் கட்டப்பட்டு கையில் தராசு வைத்திருக்கும் பெண் | -நீதிபதி |
| • உடைந்த கைவிலங்குடன் இருகைகள் | -விடுதலை |
| • சுட்டுவிரலும் நடுவிரலும் சேர்த்து V அடையாளம் | -வெற்றி |
| • தலைகீழான கொடி | -துன்பம் |
| • தீப்பந்தம் | -ஒலிம்பிக் |

## சர்வதேச தினங்கள்

| | | |
|---|---|---|
| • ஜனவரி | 04 | - உலக பிரெய்லீ தினம் |
| • பெப்ரவரி | 14 | - உலக காதலர் தினம் |
| • பெப்ரவரி | 22 | - உலக சாரணர் தினம் |
| • மார்ச் | 08 | - உலக மகளிர் தினம் |
| • மார்ச் | 22 | - சர்வதேச குடிநீர் தினம் |
| • ஏப்ரல் | 01 | - சர்வதேச முட்டாள் தினம் |
| • ஏப்ரல் | 07 | - சர்வதேச சுகாதார தினம் |
| • மே | 01 | - சர்வதேச தொழிலாளர் தினம் |
| • மே | 08 | - சர்வதேச செஞ்சிலுவை தினம் |
| • யூன் | 05 | - சர்வதேச சுற்றுச்சூழல் தினம் |
| • யூலை | 11 | - உலக சனத்தொகை தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆகஸ்ட் 29 - சர்வதேச விளையாட்டு தினம்
- செப்டெம்பர் 08 - சர்வதேச எழுத்தறிவு தினம்
- செப்டெம்பர் 21 - சர்வதேச சமாதான தினம்
- செப்டெம்பர் 27 - உலக சுற்றுலா தினம்
- ஒக்டோபர் 01 - உலக சிறுவர் தினம்
  உலக முதியோர் தினம்
- ஒக்டோபர் 04 - உலக விலங்கு நல தினம்
- ஒக்டோபர் 06 - சர்வதேச ஆசிரியர் தினம்
- ஒக்டோபர் 09 - சர்வதேச அஞ்சல் தினம்
- ஒக்டோபர் 15 - சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம்
- ஒக்டோபர் 24 - ஐக்கிய நாடுகள் சபை தினம்
- டிசம்பர் 01 - சர்வதேச எயிட்ஸ் தினம்
- டிசம்பர் 10 - சர்வதேச மனித உரிமைகள் தினம்
- டிசம்பர் 13 - சர்வதேச சிறுவர் ஒலிபரப்பு தினம்

## அடிப்படை விஞ்ஞானத் தகவல்கள்

- எரிதலுக்கும் சுவாசித்தலுக்கும் பயன்படும் வாயு
  **ஒட்சிசன்**
- ஒலி,ஒளி இரண்டிலும் வேகம் கூடியது.
  **ஒளி**
- ஒளிக் கற்றைகளை குவிக்கக் கூடியன
  **குழிவு ஆடிகள்**
- ஒளிக் கற்றைகளை விரியச் செய்யக் கூடியன
  **குவிவு ஆடிகள்**
- மின் குமிழில் அடைக்கப்பட்டுள்ள வாயுக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நைதரசன் அல்லது ஆகன்**

- வெப்பமானியில் பயன்படுத்தப்படும் திரவ உலோகம் திரவ நிலையில் உள்ள அல்லுலோகம்

  **இரசம்**

- நுளம்புக் கடியை தடுப்பதற்கு உடலில் பூசுவது

  **சிற்றினெல்லா எண்ணெய்**

- உலர் மின் கலம் ஒன்றின் மின் அழுத்த வித்தியாசம்

  **1.5V**

- மின்குமிழில் உள்ள ஒளிரும் இழை ஆக்கப் பயன்படும் உலோகம்

  **தங்குதன்**

- வெப்ப காலத்தில் மணற் தரைகளில் சூரிய ஒளி முறிவடைவதால் நீர்நிலை போன்று தோன்றுவது

  **கானல் நீர்**

- அசுத்தமான இரத்தத்தை கொண்டு செல்லும் குழாய்கள்

  **நாளங்கள்**

- ஆடையிற் படிந்த தார்க் கறையை கழுவி நீக்குவதற்கு உகந்தது

  **மண்ணெண்ணெய்**

- சிறிதளவு உலர் மண் இடப்பட்ட போத்தலில் நீரை ஊற்றிய போது குமிழிகள் உண்டாகக் காரணம்

  **வளி வெளியேறல்**

- விமானங்களில் பயன்படுத்தும் கறுப்புப் பெட்டியின் நிறம்

  **செம்மஞ்சள் அல்லது ஒரேஞ்**

- விஞ்ஞானக் கற்பனைக் கதைகளை எழுதப் பெயர் பெற்ற இலங்கை அறிஞர்

  **ஆதர் C. கிளார்க்**

- சந்திர மண்டலத்தில் ஒலியைக் கேட்க முடியாமைக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம்

**வளி மண்டலம் இன்மை**

- விற்றமின் அதிகம் இருக்கும் உணவு

**தக்காளி**

- காந்தத் துண்டை நோக்கி கவரப்படும் பொருள் சோடி

**இரும்பு உருக்கும்**

- இரும்பைக் காய்ச்சி இணைப்பதற்குப் பயன்படுத்தும் சுவாலை

**ஒட்சி அசற்றைலின் சுவாலை**

- மின் காந்தம் பயன்படுத்தப்படும் ஒரு நிர்மாணிப்பு

**மின்மணி**

# விநோத உயிரினங்கள்

| | | |
|---|---|---|
| அதிகநீர் அருந்தும் பறவை | – | புறா |
| மிகச்சிறிய முட்டையிடும் பறவை | – | தேன்சிட்டு |
| சத்தமிடாத விலங்கு | – | ஒட்டகச்சிவிங்கி |
| ஞாபக சக்தி கூடிய விலங்கு | – | யானை |
| நீலநிற இரத்தத்தையுடைய கடல் உயிரினம் | – | நண்டு, இறால் |
| பல்லில்லாத முலையூட்டி | – | தேவாங்கு |
| கடல் நீரைப்பருகும் ஒரேயொரு பறவை | – | பென்குயின் |
| பறக்கும் போதே தூங்கும் பறவை | – | ஆல்பட்றாஸ் |
| மிகப்பெரிய வாயுள்ள விலங்கு | – | நீர்யானை |
| பித்தப்பை இல்லாத முலையூட்டி | – | எலி |
| நாக்கு இல்லாத ஊர்வன | – | முதலை |
| தான் உண்ட எலும்பை ஜீரணிக்கும் ஆற்றலுடைய உயிரினம் | – | முதலை |
| நீந்த தெரியாத விலங்கு | – | ஒட்டகம் |
| எட்டுக்கால்களையுடைய உயிரினம் | – | சிலந்தி |

காலத்தை வென்று, விளங்கி, இயற்கையோடு இயைந்து
வாழக் கற்றுக் கொள்ளும் வரை மனிதனுக்கு வெற்றி ஏற்படாது

**எமர்சன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ஆராய்ச்சி நிலைய அமைவிடங்கள்

| | |
|---|---|
| ● தேயிலை | தலவாக்கல |
| ● இறப்பர் | அகலவத்த |
| ● தென்னை | லுணுவில |
| ● உலர்வலய நெல் | பத்தலகொட |
| ● சதுப்பு நில நெல் | வோம்பு வெல |
| ● உலர் வலய பயிர், விவசாய நெல் | மகா இலுப்பலாம |
| ● கறுவா | கம்புறுபிட்டிய, நுவரெலியா |
| ● சோயா | பள்ளேகல, கன்னறுவ |
| ● வைத்தியம் | கொழும்பு |
| ● புற்றுநோய் | மகரகம |
| ● ஆயுள் வேதம் | நாவின்ன |
| ● பூங்கனியியல் | கண்ணொருவ |
| ● விவசாய கால்நடை | மகா இலுப்பல்லாம |
| ● பட்டுப்புழு | பள்ளேகல |
| ● மிருகக் காட்சி சாலை | தெகிவளை |
| ● யானைகள் சரணாலயம் | பின்னவெல |
| ● பறவைகள் சரணாலயம் | குமண |
| ● வனவிலங்கு சரணாலயம் | யால, வில்பத்து |
| ● வானிலை அவதான நிலையம் | கொழும்பு |
| ● ரேடார் அவதான நிலையம் | திருகோணமலை |
| ● செய்மதி தகவல் தொடர்பு நிலையம் | பாதுக்கை |
| ● பருத்தி | அம்பாந்தோட்டை |
| ● தாவரவியல் பூங்காக்கள் | பேராதெனியா, ஹக்ஹல |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முதன்மைகள்

- பிரித்தானிய தேசாதிபதி - சேர் பிரட்றிக்நோத்
- இலங்கை தேசாதிபதி - சேர் ஒலிவர் குணதிலக
- அரசி - அனுலா
- குளம் - அபயவாவி
- பிரதமர் - டி.எஸ்.சேனநாயக்க
- ஜனாதிபதி - வில்லியம் கோபல்லாவ
- நிறைவேற்றதிகார ஜனாதிபதி - ஜே.ஆர்.ஜெயவர்த்தனா
- பெண் பிரதமர் - ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க
- பெண் ஜனாதிபதி - சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க
- சிங்களப் பத்திரிகை - லக்மினி பஹன
- தமிழ்ப் பத்திரிகை - உதயதாரகை (1841)
- ஆங்கிலப் பத்திரிகை - கொழும்பு ஜேணல்
- சர்வஜன வாக்குரிமை வழங்கிய ஆண்டு - 1931
- நாணயக் குற்றிகள் வெளியிடப்பட்டது - 1872
- நாணயத் தாள்கள் வெளியிடப்பட்டது - 1885
- விஜயம் செய்த ஐரோப்பியர் - மார்க்கோபோலோ
- தேயிலை செய்கையை அறிமுகப்படுத்தியவர் - கலாநிதி கிணேசர் - 1839
- கோப்பியை அறிமுகப்படுத்தியவர் - எட்வேர்ட் பான்ஸ் - 1823
- இறப்பரை அறிமுகப்படுத்தியவர்- ஹென்றி விக்ஹெம்பி - 1876
- தமிழ்த்துறை பேராசிரியர் -சுவாமி விபுலானந்தர்
- சனத்தொகை கணக்கெடுப்பு - 1871
- சிங்கள இராச்சிய முதலாவது தலைநகரம் -அநுராதபுரம்
- பெண்கள் பாடசாலை - உடுவில் மகளீர் கல்லூரி
- கட்டப்பட்ட தூபி - தூபாராம
- புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டது - 1858
- தேசிய அடையாள அட்டை (NIC) வழங்கும் முறை - 1972
- இலங்கை போக்குவரத்துச் சேவை அறிமுகமானது - 1958
- ஒலிபரப்பு சேவை நிலையம் ஆரம்பிக்கப்பட்து - 1925
- இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்டது - 1950
- பல்கலைக்கழகம் - இலங்கைப் பல்கலைக்கழகம் (கொழும்பு) - 1942



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இலங்கைப் பல்கலைக்கழக பிரித்தானிய துணைவேந்தர் –
  சேர் ஐவர் ஜெனிங்ஸ்
- சர்வதேச தரம் வாய்ந்த மகாநாட்டு மண்டபம் – பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபம் (BMICH) – சீன அரசாங்க நன்கொடை மூலம் கட்டப்பட்டது.

# இலங்கையின் தொழிற்சாலைகளின் அமைவிடங்கள்

- கட்டிப்பால் – பொலநறுவ
- பால், தானியம், பதனிடல் – அம்பேவல
- பால் பவுடர் – வெலிசர
- ஓட்டுப்பலகை – ஜின்தோட்ட
- உருக்கு – ஒறுவெல
- உப்பளம் – புத்தளம், அம்பாந்தோட்டை, ஆனையிறவு
- பீங்கான், மட்பாண்டம் – பிலியந்தல
- ரயர், ரியூப் – களனி
- சீமெந்து – புத்தளம், காலி, காங்கேசன்துறை
- காகிதம் – வாழைச்சேனை, எம்பிலிபிட்டிய, ராஜாங்கன
- புடவை – துல்கிரிய, பூகொட, வியாங்கொட
- தோற்பொருள் பதனிடல் – மட்டக்குளிய
- சீனி – கந்தளாய், ஹிங்குரான, பெலவத்த
- கனிப்பொருள் சுத்திகரிப்பு – புல்மோட்டை
- இறப்பர் – மாவனல்ல
- எண்ணெய் சுத்திகரிப்பு – சபுகஸ்கந்த
- மட்பாண்டம் – ரத்தோட்ட, பிலியந்தல
- கண்ணாடி – நாத்தாண்டிய
- உலோகம், இரும்பு – யக்கல
- கோதுமை மா (பிறீமா) – திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இரசாயனம் - பரந்தன்
- இரத்தினக்கற்கள் - இரத்தினபுரி
- அபடைட் - எப்பாவல
- இல்மனைட் - புல்மோட்டை
- கரும்பு - உடவளவை

## விண்வெளி தகவல்கள்

- அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் பெயர்

  **நாஸா**
- விண்வெளிக்கு சென்ற முதல் மனிதர்

  **யூரிககாரின்**
- வானவெளியில் உள்ள கோள்கள்

  **ஆகாயக்கற்கள்,உடுக்கள், வால்வெள்ளி, வான்பொருட்கள்**
- சுய ஒளி உடையது

  **சூரியன்**
- ஞாயிற்றுத் தொகுதி

  **சூரியனையும் அதனைச் சுற்றி உள்ள கோள்களையும் உபகோள்களையும் உள்ளடக்கியது.**
- ஞாயிற்றுத் தொகுதியின் கோள்கள்

  **புதன், பூமி, வியாழன், யுரேனஸ், வெள்ளி, சனி, செவ்வாய், நெப்டியூன்**
- ஞாயிற்றுத் தொகுதியில் இருந்து நீக்கப்பட்ட கோள்

  **புளூற்றோ**
- பூமி தோன்றியது

  **450 கோடி ஆண்டுகளுக்கு முன்னர்**
- லைகா என்னும் நாய்

  **விண்வெளிக்கு சென்ற முதலாவது உயிரினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவழி

- வல்லிபுரம் + வள்ளிப்பிள்ளை
  - **முருகுப்பிள்ளை**
- கதிரித்தம்பி (SKV) + பொன்னம்மா
  - இலட்சுமிப்பிள்ளை (அமரர்)

முருகுப்பிள்ளை + இலட்சுமிப்பிள்ளை (அமரர்)

- இராசேந்திரம் + யோகலட்சுமி
  - பிறேமானந்தன் (நோர்வே) + கேமா (நோர்வே)
    - ஆரபிகா
    - ஆதவன்
  - பிறேமலதா (ஆசிரியை) + பிரபாகரன் (பிரான்ஸ்)
    - பிரகதீஸ்
  - பிறேம்குமார் (சுற்றாடல் உத்தியோகத்தர்) + வினோதினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்)
    - வர்மிசான்
    - உஷான்
  - விஜிதகுமார் (சுவிஸ்) + கார்த்திகா (சுவிஸ்)
    - றியான்
    - நைனிகா
  - அருள்தாஸ் (இலண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

"காலத்தினால் செய்தநன்றி சிறிதெனினும்
ஞாலத்தில் மானப் பெரிது"

என்னும் வள்ளுவன் கூற்றுக்கு ஒப்பாக நன்றிகள் கூறக் கடமைப் பட்டுள்ளோம்.

எமது அன்புத்தந்தையாரும், குடும்பத் தலைவனுமான அமரர் வல்லிபுரம் **முருகுப்பிள்ளை** அவர்கள் காலமாகிவிட்ட செய்தி அறிந்து ஓடோடி வந்து எமது துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறித் தேற்றியோர்களுக்கும், தொலைத் தொடர்புகள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்த அன்பு உள்ளங்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை அடித்து வெளியிட்டோர்க்கும் இறுதிக் கிரியைகளை நடாத்த உதவி புரிந்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் ஆகியோர்களுக்கும், ஏனைய உதவிகள் புரிந்தோர்களுக்கும் இன்று நடைபெறும் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளில் கலந்து ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் எமது நன்றிகளை அன்புடன் நவில்கின்றோம்.

**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உம்புகழ் பூவுலகம் வாழும் காலம் வரை அப்பா...!



வடிக்கின்ற வரிகளுக்கு கண்கள் இல்லை
இருந்தாயின் கிறுக்குகின்ற
கடதாசி கண்ணீரில் ஊறிவிடும்
தந்தையே
காலமெல்லாம் சுமந்தாய் உம்
நெஞ்சினில் ..
உறக்கம் தொலைத்தாய் உழைத்தாய்
களைத்தாய் வியர்வையில் குளித்தாய்
நாங்கள் நலமாய் வாழவே..
வலிகள் எம்மைத்தாக்கினால்
வலிப்பதென்னவோ உமக்கல்லவா..
துயரங்களால் எம் விழி நனைந்தால்
துடைப்பது உம் விரல்களல்லவா..
சோதனையானாலும் வேதனையானாலும்
தோள்கொடுக்கும் தோழன் நீங்கல்லவா..
அனுதினமும் போற்றப்படவேண்டும்
உம் புகழ்
பூவுலகம் வாழும் காலம் வரை...! அப்பா....

என்றும் **அன்புடன்**
**மகன், மருமகள்**



வேழன் பதிப்பகம், கிளிநொச்சி .021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org